காங்கயம் நகராட்சி
மன்றக்கூட்டத்தாள்

நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் கார்த்திகை 28–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 டிசம்பர் 14-ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.

மன்றப்பொருள்: 1

கோப்பு எண் : 296/2018 /இ1

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கு நகராட்சி சார்பாக ரூ.130.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு நகராட்சிநிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 13277 / 2018/ WS1, நாள். 03.07.2018–ல் செயல்முறை உத்திரவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பணிக்கு காங்கயம் நகராட்சிக்கு ரூ.100.42 இலட்சத்தை (ரூபாய் நூாறு இலட்சங்கள் மற்றும் நாற்பத்து இரண்டு ஆயிரம் ரூபாய் மட்டும்) வட்டியில்லா கடனாக வழங்குவதாக டுபிட்கோ நிறுவனத்தின் கடிதம் எண். TUFIDCO / URF1819–40 ULBs/AM(M) /2018, Dated. 07.12.2018–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மேற்படி பணியை மேற்கொள்ள ரூ.102.00 இலட்சம் (ரூபாய் நூற்று இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதால் டுபிட்கோ நிறுவனத்தினால் வட்டியில்லா கடனாக வழங்கப்பட உள்ள ரூ.100.42 இலட்சம் (ரூபாய் நூாறு இலட்சங்கள் மற்றும் நாற்பத்து இரண்டு ஆயிரம் ரூபாய் மட்டும்) போக மீதமுள்ள தொகை ரூ.1.58 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து எட்டு ஆயிரம் மட்டும் ) தொகையை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. டுபிட்கோ நிறுவனம் கடனாக வழங்கும் தொகை போக மீதமுள்ள தொகை ரூ.1.58 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து எட்டு ஆயிரம் மட்டும் ) தொகையை பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண்.1056 . நாள்.14.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

மன்றப்பொருள்: 2

கோப்புஎண் : 2000/2018/எச்1

காங்கயம் நகராட்சியானது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 99 நாள்: 1.6.2010 முதல் பேரூராட்சியாக இருந்து நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் பரப்பளவு 22.17 ச.கி.மீ நீளம் கொண்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சுமார் 32147 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் உள்ள வார்டுகளின் எண்ணிக்கை 18. வடிகால்களின் நீளம் 36 கி.மீ , வீதிகளின் எண்ணிக்கை சுமார் 190 உள்ளது. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளின் அளவு 15 மெ.டன். இதற்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் டிராக்டர்-1 , டிப்பர் லாரி-2, டம்பர் பிளேசர்-2 ஜே.சி.பி-1 சைக்கிள் ரிக்ஷா -20 மற்றும் தள்ளுவண்டிகள் - 10 ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இதில் தற்போது 38 நிரந்தர துப்புரவு பணியாளர்களில் 37 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இவர்களைக்கொண்டு பொதுசுகாதாரபணி திறம்பட செயல்படத்திட முடியாத நிலையில் உள்ளதால் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்101 நாள்:30.4.1997ல் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ள அளவுகோலின்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் ந.க.எண்.28369/ஜே3 நாள்.04.12.2018ன்படியும் 129 தற்காலிக சுகாதார பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் பணி செய்திட உத்திரவிடப்பட்டுள்ளது. (Engagement of labours

on contract basis by out sourcing from private service Provider for the sanitation work) மேலும் இவ்வுத்திரவில் கீழ்கண்ட நடைமுறைகளை பின்பற்றவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. **மாவட்ட ஆட்சியர் திருப்பூர், அவர்களின் துப்புரவு பணியாளர் தினக்கூலி அடிப்படை ஊதியத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.**
2. **நகராட்சிகளின் சட்ட விதிகளின்படி ஒப்பந்தப் புள்ளிகள் இருத்தல் வேண்டும்.**
3. **ஒப்பந்தபுள்ளி கோரும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்தில் பணியாளர்களை தேவையான அளவில் உள்ளதை உறுதி செய்தல் வேண்டும்.**
4. **வீடுகள் தோறும் குப்பைகள் சேகரித்தல் (**Primary Collection), **வாகனம் மூலம் குப்பைகள் சேகரித்தல் (**Secondary Collection) **மற்றும் மக்கும் கழிவுகளில் இருந்து உரம் தயார் (**Wet Waste Manure preparation ) **செய்தல்.**
5. **மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி அடிப்படை ஊதியம் மற்றும் கூடுதலாக** ESI,EPF,INSURANCE, SERVICE TAX, UNIFORMS AND SAFETY EQUIPMENTS **ஆகியவற்றுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்படுதல் வேண்டும்.**
6. **மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும்போது திட்டமதிப்பீட்டு தொகையில் 10சதவீதத்திற்கும் குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறும் எனில் அதனை நிராகரிக்க வேண்டும்.**

| **அரசாணை எண்:101ன் படி தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் விபரம்** | | | | |
|---|---|---|---|---|
| வ.எண். | வேலை வகைப்பாடு | அளவு கோல் | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | தேவையான துப்புரவுப் பணியாளர் எண்ணிக்கை |
| 1. | 250 குடியிருப்புகளுக்கு ( அல்லது ) மூன்று கிலோ மீட்டர் சாலைக்கு | 3 பேர் கொண்ட குழு | 12009 | 144 |
| 2. | பெரிய லாரிக்கு | 4 | . . | 4 (பெரிய லாரி 1 எண்ணிக்கை) |
| 3. | சிறிய லாரிக்கு– 2 | 3 | . . | 6 (சிறிய லாரி–2 எண்ணிக்கை) |
| 4. | டிராக்டர் வாகனத்திற்கு | 3 | . . | 3 (டிரேக்டர்–1 எண்ணிக்கை) |
| 5. | டில்லர் / மினி ஆட்டோ வாகனத்திற்கு | 1 | . . | 4 (மினி ஆட்டோ 2 எண்ணிக்கை) |
| 6. | உரக்கிடங்கு பராமரிப்புக்கு ( நாள் தோறும் 20 மெட்ரிக் டன் குப்பை சேருமிடத்திற்கு )<br>20 மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக குப்பை சேருமிடத்திற்கு | 2<br>4 | . .<br>. . | 2 (15 மெட்ரிக் டன்)<br>. . |
| 7 | பேருந்து நிலைத்திலும் மற்றும் அங்காடியில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தை பராமரிக்க | 1 | . . | –– |
| 8 | கழிவு நீர்ப்பண்ணை பராமரிக்க<br>20 ஏக்கர் வரை<br>20 ஏக்கருக்கு மேல் | <br>2<br>4 | . . | <br>–<br>– |
| 9 | பேருந்து நிலைய கழிப்பறையை பராமரிக்க | 1 ஆண், 1 பெண் | . . | 1 ஆண், 1 பெண்–2 து.ப |
| 10 | பேருந்து நிலையத்தை சுத்தம் செய்ய ‘ சி ’ மற்றும் ‘ டி ’ பேருந்து நிலையத்திற்கு | 2 | . . | 2 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ‘ ஏ ’ மற்றும் ‘ பி ’ பேருந்து நிலையத்திற்கு | 4 | | – |
| 11 | பத்து லட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடியையும் மற்றும் அங்குள்ள கழிப்பறையை சுத்தம் செய்யவும் | 2 | . . | 16 பேர் |
| | கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து இலட்சத்திற்கும் கூடுதல் பணியாளர்கள் | 4 | | ரூ.85 இலட்சம் |
| 12 | கழிவு நீர் ஊர்திக்கு | 2 | . . | – |
| 13 | குப்பை வண்டிக்கு | 1 | . . | – |
| 14 | கழிவு நீர் வண்டிக்கு | 2 | . . | – |
| 15 | மாடுகளை பராமரிக்க<br>20 மாடுகளுக்கு<br><br>20 மாடுகளுக்கு அதிகமாயிருப்பின் | 1<br><br>2 | . . | –<br><br>– |
| | மொத்தம் | | - | 167 துப்புரவு பணியாளர்கள் |

**<u>துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை விபரம்</u>**

| வ.எண் | வாகனங்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரசாணை எண். 101, நாள். 30.06.1997 தேவையான அளவுகோல் | 167 |
| 2 | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | 38 |
| 3 | பற்றாக்குறை | 129 |

தற்போதைய நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தித்தினை செயல்படுத்திட தற்காலிக துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.28369/ஜே3 நாள்.04.12.2018ஆம் தேதிய செயல்முறைகள் ஆணையின்படி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்த அடிப்படையில் தற்போது 100 துப்புரவு பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ள தனியார் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்திட பொது சுகாதார பிரிவிற்கு தேவையான மேற்கண்ட விபரப்படி தற்காலிக ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் 100 பேர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் உத்திரவின்படியும் மாவட்ட ஆட்சியர் திருப்பூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6816/2018/உ3, நாள்.18.09.2018ம் தேதியில் உத்தரவில் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி ஊதியத்திற்கு தொகைக்கு மிகாமலும் ஒப்பந்த புள்ளி கோரிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1057 . நாள்.14.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.
**<u>மன்றப்பொருள்:</u>** 3

**கோப்புஎண் :2003 /2018/எச்1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதார வாகனம் டிராக்டர் வண்டி எண்.TN33AZ0014 எண் உள்ள வண்டியில் உள்ள ஆயில் பம்ப், சைலன்சர் ஆகியவற்றில் உள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

உத்தேச மதிப்பீடு ரூ.20000/–

**அலுவலகக்குறிப்பு:**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1058 . நாள்.14.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:**</u> 4

**கோப்புஎண்.1998/2018/எச்1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தி வரும் வண்டி எண். TN 42 Y 8703 மோட்டார் வாகனஆய்வு (FC) முடிவடைகிறது. மேலும் 2018–2019–ம் ஆண்டுக்கு மோட்டார் வாகன ஆய்வு வேலைகளுக்கு வண்டியில் உள்ள பழுதுகள் நீக்கி பெயிண்டிங் செய்வது மற்றும் முன்புற டயர் இரண்டு எண்ணிக்கையில் புதுப்பித்திட, ஏற்கனவே நகர் மன்ற தீர்மானம் எண்.1039 நாள்.31.10.2018ன் படி மன்றம் அனுமதி வழங்கப்பட்டதின் படி கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மதீப்பீட்டு தொகை. 1.50 இலட்சம்.

1. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர் – மதிப்பீட்டைவிட 0.86 % குறைவு
2. காந்தி மோட்டார்ஸ், ஈரோடு. – மதிப்பீட்டைவிட 0.33 % குறைவு

மேற்காணும் இரு நிறுவனங்களிலிருந்து, வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள வ.எண்.2, காந்தி மோட்டார்ஸ் ,ஈரோடு எனும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு:**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1059. நாள்.14.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:**</u> 5

**ந.க.எண் : 1963/2016 /எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை பொது சுகாதார பிரிவில் உள்ள வாகனங்களின் மூலம் சென்னிமலை ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. இவ்வாறு கொட்டப்படும் குப்பைகள் அனைத்தும் பேரூராட்சி காலம் முதல் சுமார் 40 வருடங்களுக்கு மேலாக சேகரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளை குப்பைக்கிடங்கின் வடபுற பகுதியில் கொட்டப்பட்டு வருகிறது. தற்போது கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் கழிவுகளை சுத்திகரிப்பதற்காக மேற்கண்ட வடபுற பகுதியில் கட்டிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு மேற்கண்ட பணி துவங்கப்பட உள்ளது.

தற்போது மேற்படி திட்டத்திற்கான பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி குப்பைக்கிடங்கில் வடபுற பகுதியில் பல வருடங்களாக கொட்டப்பட்டுள்ள குப்பைகள் அனைத்தும் தென்புறம் காலியாக உள்ள ஒரு பகுதியில் தனியார் நிறுவனத்தின் கிட்டாச்சி மற்றும் டிப்பர் லாரிகளை கொண்டு குப்பைகளை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சம்

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1056 . நாள்.14.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

## காங்கயம் நகராட்சி
## மன்றக்கூட்டத்தாள்

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் மார்கழி 16–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 டிசம்பர் 31 ஆம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**மன்றப்பொருள்: 1**

**கோப்பு எண் : 1355 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018–19ன் கீழ் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு குப்பைக்கிடங்கில் நாளொன்றிற்கு 20000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மனித கழிவு கசடு சுத்திகரிப்பு நிலையம் (Faecal Sludge Tratment plant) கட்டும் பணிக்கு 21.12.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | M/s.Aiga Engineers Pvt Ltd |
| 2) | M/s.R.Velumani |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக இருந்தது. இதன்படி 27.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகளின் விலைவிகிதம் ( price pid ) திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s.Aiga Engineers Pvt Ltd | 29.30% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2) | M/s.R.Velumani | 42.75% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரர் M/s.Aiga Engineers Pvt Ltd அவர்கள் மதிப்பீட்டை விட அதிக விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின் படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி M/s.Aiga Engineers Pvt Ltd அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண். 1355 / 2018 / இ1, நாள்.27.12.2018–.ன் மூலம் கோரப்பட்டது.ஒப்பந்ததாரர் தற்போது பணியாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு அதிகமாக இருப்பதால் மேற்படி பணிக்கான விலைவிகிதத்தை இனம் வாரியாக விலைக்குறைப்பு செய்து விலைக்குறைப்பு கடிதம் கொடுத்துள்ளார். இந்த விலைவிபரத்தினை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்பு நோக்கு செய்யும் பொழுது மதிப்பீட்டு விலையைவிட 4.95 %கூடுதலாக விலைவிகிதம் உள்ளது. இந்த விலைவிகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுடுகறது.

**அலுவலகக் குறிப்பு:**

1.மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட வேண்டியுள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் M/s.Aiga Engineers Pvt Ltd அவர்களின் 4.95 % கூடுதல் விலைவிகிதம் நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகையான ரூ.2.00 கோடிக்கு மிகாமலும் உள்ளதால் M/s.Aiga Engineers Pvt Ltd நிறுவனத்தின் 4.95 % அதிக விலை விகிதத்தை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1061 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 2

**பெ.மா.ம.எண் :65/2018/அ1**

காங்கயம் நகராட்சி வார்டு எண்.11, பங்களாபுதூர்ரோடு, கதவு எண்கள் 8, 9, 24, 26, 25, மற்றும் 25A இதன் சொத்து வரிவிதிப்பு எண்கள் 6060 மற்றும் 6061 இன் சொத்துவரிவிதிப்பு பெயரானது திரு.சிம்சன் பெயரிலிருந்து திருமதி.சுகந்தா ராஜய்யா என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் எனவும், சொத்துவரி வரிவிதிப்பு எண்கள் 5905 மற்றும் 5907 இன் சொத்துவரிவிதிப்பு பெயரானது திரு.சிம்சன் பெயரிலிருந்து திரு.பூவேந்திரன் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய வேண்டும் எனவும் மேலும் சொத்துவரி வரிவிதிப்பு எண்கள் 5906 மற்றும் 6023 இன் சொத்துவரிவிதிப்பு பெயரானது திரு.சிம்சன் பெயரிலிருந்து திருமதி.கீதாசித்ரா என்பவர் பெயருக்கு மாற்றம் செய்ய கோரி மனுதாரர் பூவேந்திரன் வகையரா மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயத்தில் வழக்கு எண்.O.S.No.268/2018-இன்படி வழக்கு தொடர்ந்துள்ளனர்.

மேற்படி, வழக்கில் நகராட்சி வழக்கறிஞர். திரு.செல்வக்குமார் அவர்கள் இந்நகராட்சி சார்பாக வழக்கு எடுத்து நடத்துவதற்கும் அதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம்) பொது நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1062 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 3

**ந.க.எண்.840/2017/சி1**

கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்தின் ந.க.எண்.848/2018/அ2, நாள்.18.12.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, காங்கயம் நகராட்சியின் 2018–2019 ஆம் ஆண்டிற்குரிய பங்கு தொகை ரூ.20,000/–ஐ கோயமுத்தூர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1063 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 4

**ந.க.எண்.1738/2018/பி2**

2018–2019 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2014–2015 ஆம் ஆண்டு வரை கொண்டு செல்லப்பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகையினை திரும்பி தருமாறு விண்ணப்பித்துள்ளனர்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | தொழில் வரி மற்றும் அபராத தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பி.கருப்புசாமி | பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | 2011–2012 | 37 | 129 | 25000 | 0 | 25000 |
| | | | | 37 | 130 | 25000 | 0 | 25000 |
| | | | | 37 | 131 | 25000 | 0 | 25000 |
| | | | | 37 | 132 | 75000 | 0 | 75000 |
| 2 | எஸ்.கோவிந்தசாமி | நகரப் பேருந்து கடை எண் 15 | 2009–2010 | 28 | 4 | 11780 | 4842 | 6938 |
| | | | 2012–2013 | 38 | 13 | 8271 | 0 | 8271 |
| 3 | பி.தங்கவேல் | சென்னிமலை ரோடு வாரச்சந்தை கடை எண் 4 | 2006–2007 | 20 | 8 | 10000 | 1800 | 8200 |
| | | | 2011–2012 | 33 | 61 | 24600 | 0 | 24600 |
| 4 | என்.பாலகிருஷ்ணன் | பழைய பேருந்து நிலைய கடை எண் 12 மற்றும் 16 | 2013–2014 | 12 | 36 | 30000 | 13014 | 16986 |
| | | | | 12 | 37 | 8922 | 0 | 8922 |
| | | | | 15 | 76 | 1978 | 0 | 1978 |
| 5 | பி.தவப்பிரியா | ஐடிஎஸ்எம்டி கடை எண் 8 | 2007–2008 | 22 | 7 | 49000 | 2275 | 46725 |
| 6 | எம்.அன்னலட்சுமி | பழைய பேருந்து நிலைய கடை எண் 18 | 2013–2014 | 13 | 53 | 12425 | 1800 | 10625 |
| | | | | 14 | 75 | 10000 | 0 | 10000 |
| 7 | எ.ரகுநாதன் | பழைய பேருந்து நிலைய கடை எண்21 மற்றும் 27 | 2013–2014 | 12 | 33 | 60000 | 2100 | 57900 |
| | | | | 12 | 39 | 30000 | 0 | 30000 |
| | | | | 15 | 81 | 7379 | 0 | 7379 |
| | | | | 15 | 82 | 10000 | 0 | 10000 |
| | | | | 16 | 102 | 17600 | 0 | 17600 |
| 8 | ராஜேஷ் | பழைய பேருந்து நிலைய கடை எண் 10 | 2014–2015 | 6 | 75 | 35150 | 3075 | 32075 |
| | | | | 7<br>6 | 76<br>73 | 10000<br>100000 | 0<br>0 | 10000<br>100000 |
| 9 | என்.கந்தவேல் | திருப்பூர் ரோடு நுழைவு வாயில் வடபுற காலியிட கடை எண் 2 | 2014–2015 | 8 | 100 | 9000 | 2180 | 6820 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | ஆர்.முத்துலட்சுமி | திருப்பூர் ரோடு நுழைவு வாயில் வடபுற காலியிட கடை எண் 3 | 2014–2015 | 8 | 101 | 9500 | 1800 | 7700 |
| 11 | என்.கந்தவேல் | திருப்பூர் ரோடு நுழைவு வாயில் வடபுற காலியிட கடை எண் 1 | 2014–2015 | 8 | 102 | 9000 | 2200 | 6800 |
| 12 | துரை | திருப்பூர் ரோடு நுழைவு வாயில் வடபுற காலியிட கடை எண் 4 | 2014–2015 | 8 | 103 | 8500 | 1800 | 6700 |

மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய தொழில் வரி தொகை மற்றும் அபராதத் தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகையினை பொது நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1064 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 5

**ந.க.எண்.756/2016/அ2**

2003–2004 முதல் 2014–2015 வரை குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக கொண்டு செல்லப்பட்டுள்ளது. ஆடு அடிக்கும் சாலை இனத்திற்கு குத்தகைதாரர் திரு.அப்துல்சமது தனது விண்ணப்பத்தில் 2013–2014 ஆம் ஆண்டில் கீழ்கண்ட விபரப்படி தான் செலுத்திய வைப்பு தொகை ரூ.50000/– ஐ 2018–2019 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய குத்தகை தொகைக்கு ஈடு செய்து கொள்ளுமாறு கோரியுள்ளார்.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | வாடகைக்கு ஈடு செய்யும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அப்துல் சமது | ஆடு அடிக்கும் சாலை | 2013–2014 | 10 | 1 | 49000 | 49000 |
| | | | | 10 | 2 | 1000 | 1000 |
| மொத்தம் | | | | | | 50000 | 50000 |

மேற்படி குத்தகைதாரரின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து செலுத்தவேண்டிய வாடகை தொகை மற்றும் சேவை வரி தொகையினை ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.1065 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:</u>** 6

**கோப்பு எண் : 1231/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசைப்பம்பு திட்டங்களில் பொருத்தப்பட்டுள்ள காற்றழுத்த மின்மோட்டார் கம்ப்ரஸர்கள் திறன் இழுந்த நிலையில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு தொடர்ந்து இயக்க இயலாத நிலையிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையிலும் உள்ளது.

1. சௌடாம்பிகை நகர்
2. கணபதி நகர்
3. சின்னாய்புதுார்
4. பாப்பங்காடு

எனவே, மேற்படி மின் மோட்டார்களுக்கு பதிலாக புதியதாக 5 கு.வே காற்றழுத்த மின்மோட்டார்கள் பொருத்த வேண்டியுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் இப்பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. . மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.40 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1066 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:</u>** 7

**கோப்பு எண் : 1204/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் புதியதாகப் பொருத்தப்பட்டுள்ள 20 மீ உயர்கோபுர மின்விளக்கிற்கு மின் விநியோகம் சீராக கிடைக்கும் பொருட்டு 15KVA Voltage Controller Box அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1067 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 8

**கோப்பு எண் : 1212/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பட்டேல் வீதியில் குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள் காரணமாக சிமெண்ட் சாலை சேதமடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், திருவள்ளுவர் வீதியில் தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் இப்பகுதியில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த சாலையை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பணியின் அவசியம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும் இப்பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.6.30 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1068 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 9

**கோப்பு எண் : 1198/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு உடையார் காலணி மற்றும் வெள்ளியங்காட்டு புதுார் ஆகிய பகுதிகளில் கீழ்க்கண்டுள்ள இடங்களில் தண்ணீர் தொட்டிகள் மற்றும் மேடைகள் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் தண்ணீர் பிடிக்க இயலாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

1. டெலிபோன் குடியிருப்பு பகுதி
2. மளிகை மணி கடை எதிர்புறம்
3. சிவன்மலை ஆண்டவர் திருமண மண்டபம் அருகில்
4. கோவிந்தராஜ் மேஸ்திரி வீடுஅருகில்
5. வெள்ளியங்காட்டு புதுார்

மேற்படி பழுதடைந்த மேடைகளை புதுப்பித்தும் புதிய தண்ணீர் தொட்டிகள் பொருத்தியும் பொதுமக்களுக்கு தண்ணீர் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. இப்பணி குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1069 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 10

**கோப்பு எண் : 844/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு உடையார் காலணி பகுதியில் சரிவர குடிநீர் விநியோகம் கிடைப்பதில்லை. இதனை சரிசெய்து சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு பொதுமக்கள் கோரி வருகின்றனர். இதற்கு கோவைரோடு பகுதியிலிருந்து வாய்க்கால்மேடு வழியாக உடையார்காலணி வரை மற்றும் டெலிபோன் குவார்ட்டர்ஸ் வீதிகளில் 5” தனித்துணைக்குழாய் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணி மிகவும் அவசியமாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1070 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 11

**கோப்பு எண் : 831/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் குடிநீர் இணைப்புகள் கோரி பொதுமக்கள் விண்ணப்பித்துள்ளனர்.

1. வெங்கு நகர்
2. பெரியார் நகர்
3. சென்னிமலை ரோடு – குறவர் காலணி
4. அய்யாசாமி காலணி

மேற்படி பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கப்படவில்லை. எனவே, இப்பகுதிகளில் விநியோக குழாய்கள் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.70 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1071 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 12

**கோப்பு எண் : 1197/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பாரதியார் வீதியில் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் தண்ணீர்(கழிவு நீர்) செல்லாமல் தேங்கி வருகிறது. இதனால், சுகாதாரக்கேடு ஏற்படும் நிலையுள்ளது. மேலும், வ.ஊ.சி வீதி, கட்டபொம்மன் வீதி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள் பக்கவாட்டு சுவர் மற்றும் அடித்தளம் பழுதடைந்துள்ளது. இதனால் கழிவுநீர் சீரான முறையில் செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, இந்த வடிகால்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வார்டு எண்.11 ஆசிரியர் வீதியில் அமைக்கப்பட்டுள்ள வடிகாலின் மேல் கான்கிரீட் மூடிகள் உடைந்துள்ளது. இந்த வீதி மிகவும் குறுகலானது என்பதால் கான்கீரிட் மூடி உடைந்துள்ளதால் வாகனங்கள் செல்ல இயலாமல் போக்குவரத்திற்கு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த வடிகாலின் மேல் பகுதியில் பழுதடைந்த கான்கீரிட் மூடிகளை அகற்றிவிட்டு புதிய கான்கீரிட் மூடிகள் அமைக்க வேண்டியுள்ளது. இந்த பணிகள் பொதுமக்கள் நலன் கருதி உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 4.00 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1072 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 13

**கோப்பு எண் : 1934/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 8வது வார்டு KSR வீதியில் வடிகால் அமைப்பு இல்லை. இதனால் கழிவுநீர் செல்ல வழியின்றி சாலையில் தேங்கி நிற்கிறது. இதனால், சுகாதார கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே, கழிவுநீர் வெளியேற வடிகால் அமைத்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். இந்த வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 7.30 இலட்சத்திற்கு (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பது ஆயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1073 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 14

**கோப்பு எண் : 1898/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் கீழ்க்கண்டுள்ள இரண்டு குடிநீர் திட்டங்கள் செயல்பட்டு வருகிறது.

1. அமராவதி குடிநீர் திட்டம்
2. காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம்

இந்த குடிநீர் திட்டங்களின் மூலம் பொதுக்குழாய்கள் மற்றும் தனியார் வீட்டு இணைப்புகள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் காவிரி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் இரண்டாவது குடிநீர் திட்டம் முடிவுற்று சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முழு அளவில் செயல்பாட்டிற்கு வரும்பொழுது சீரான குடிநீர் விநியோகம் வழங்க இயலும். அப்பொழுது குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்தவும், அனைவருக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யும் விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு முதல்கட்டமாக தனியார் இணைப்புகளில் மீட்டர் பொருத்தப்பட்டு குடிநீர் அளவு கணக்கிட்டு குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்யலாம். எனவே, தனியார் குடிநீர் இணைப்புகளில் மின் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது, இயங்குவது, இயங்காதது என கண்டறிந்து ஆய்வு செய்து முறையான அறிவிப்பு வழங்கி மீட்டர் இயங்கும் நிலைக்கு கொண்டுவர வேண்டும். இதற்கு பின்னர் மாதாமாதம் முறையாக அளவீடு செய்து குடிநீர் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும். இந்தப் பணிகளுக்கு நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை. எனவே , இப்பணியை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் மூன்று பணியாளர்களை நிர்ணயம் செய்யலாம். இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5.20 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மற்றும் இருபது ஆயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1074 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 15

**ந.க.எண்.1933/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான திருப்பூர் ரோடு ஐ.டி.எஸ்.எம்.டி கடை எண்.6ஐ திரு.விஸ்வநாதன் என்பவருக்கு 01.11.2017 முதல் 31.10.2020 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமை இந்நகர்மன்ற தீர்மான எண்.728, நாள்.03.11.2017–இன்படி தீர்மானிக்கப்பட்டது. குத்தகைதாரர் 12 மாத வாடகை ரூ.10200/– மற்றும் டேவணித் தொகை ரூ.100000/– மொத்தம் ரூ.202000/– ஐ இந்நகராட்சியில் செலுத்தியுள்ளார். 01.11.2017 முதல் வாடகை செலுத்தாமல் நிலுவையாக உள்ளதை வாடகை செலுத்த கோரி அறிவிப்புகள் அனுப்பபட்டும் வாடகை செலுத்தாமல் இருந்ததால் 17.12.2018 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டு நகராட்சி வசம் ஒப்படை பெறப்பட்டது.

01.11.2017 முதல் 31.12.2018 முடிய உள்ள காலத்திற்கு உண்டான வாடகை தொகை ரூ119000/– மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T) ரூ.21420/– மொத்தம் ரூ.140420/– நிலுவைத் தொகையினை குத்தகைதாரர் வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்து வாடகை தொகைக்கு வரவு வைக்கவும், மேற்படி கடையின் குத்தகை உரிமத்தினை ஏல

நிபந்தனைகளின்படி இரத்து செய்யவும், மேலும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு பொது ஏலத்திற்கு கொண்டு வரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1075 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 16

**கோப்பு எண் : 757/2016/அ3**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் சாலைக்கான மூன்று ஆண்டுகள் குத்தகை காலம் 31.03.2019 ஆம் தேதியுடன் முடிவடைவதால் ஆடு அடிக்கும் சாலையை பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1076 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 17

**கோப்பு எண் : 724/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு பெருமாள் கோவில் வீதி, ராஜாஜி வீதி, வினோபா வீதி மற்றும் மஜீத் வீதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கபட்டு சுமார் 20 வருடங்களுக்கும் மேல் ஆகிறது. இந்த குழாய்கள் பழுதடைந்து இதன் அளவு குறைந்துள்ளது. இதனால் குறைவான அளவு தண்ணீர் மட்டுமே விநியோகம் செய்யப்படுகிறது. இதனால், காலவிரயம் ஏற்படுவதுடன் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் கிடைப்பதில்லை. இந்த குறைபாட்டை சரிசெய்ய இந்த குழாய்களை அகற்றிவிட்டு புதியதாக 90 எம்.எம் பிவிசி குழாய்கள் பொருத்த வேண்டியுள்ளது. குடிநீர் அவசர அவசியம் கருதி இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1077 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 18

**கோப்பு எண் : 739/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் கீழ்க்காணும் இடங்களில் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய மின் சிக்கன சேமிப்பு திட்டத்தின் கீழ் உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்க அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

1. கோவை ரோடு – பங்களாபுதூர் பிரிவு அருகில்
2. தாராபுரம் ரோடு – அமராவதி நகர் பிரிவு
3. எரிவாயுதகனமேடை முன்புறம் சென்னிமலைரோடு
4. கரூர் ரோடு – முத்தூர்பிரிவு அருகில்

மேற்கண்ட இடங்களில் உயர்கோபுர மின் விளக்குகள் அமைக்கும் பணிக்காக மின் இணைப்பு பெற வேண்டியுள்ளது. இதற்கு வ.எண்.1 முதல் 3 வரையிலான இடங்களில் மின் இணைப்பு பெறுவதற்கான அறை அமைக்க வேண்டியுள்ளது. எனவே, மூன்று மின் அறைகள் மற்றும் நான்கு மின் இணைப்புகள் பெற வேண்டியுள்ளது. இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1078 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 19

**கோப்பு எண் : 884/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் தனியார் வீட்டு குடிநீர் இணைப்புகள் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

1. சென்னிமலை ரோடு
2. வெங்கு நகர்
3. பெரியார் நகர்
4. அய்யாசாமி காலணி
5. லட்சுமி நகர்
6. ராஜா ஸ்கூல் அருகில்

இப்பகுதிகளில் குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கப்படவில்லை. எனவே, இப்பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய்கள் விஸ்தரிப்பு செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே, இப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.70 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து எழுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1079 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 20

**கோப்பு எண் : 1347/2018 /இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018—19ன் கீழ் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தொட்டியபட்டி முதல் பழையகோட்டை வரையிலான தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இந்த சாலையை காலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த சாலையை பராமரிப்பு பணிகள் செய்து தருமாறு இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர். எனவே, பொதுமக்கள் நலன் கருதி இந்த தார்சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.35.00 இலட்சத்திற்கு (ரூபாய் முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1080 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:**</u> 21

**கோப்பு எண் : 710/2018 /இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2018–19**ன் கீழ் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட செம்மாங்காளிபாளையம் மாகாளியம்மன் கோவில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால், போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதாகவும், இதனை சீரமைத்து தருமாறும் இப்பகுதி பொதுமக்கள் கோரி வருகின்றனர் . எனவே, பொதுமக்கள் நலன்கருதி இந்த சாலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**15.50** இலட்சத்திற்கு (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1081 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:**</u> 22

**கோப்பு எண் : 715/2018 /இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2018–19**ன் கீழ் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட செம்மாங்காளிபாளையம் மெயின்வீதி, **1,2** மற்றும் **3**வது குறுக்கு வீதிகளில் தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால், பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த தார்சாலைகளை பராமரிப்பு பணிகள் செய்து சீரமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**14.00** இலட்சத்திற்கு (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1082 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:**</u> 23

**கோப்புஎண்.1622 /2017/எச்1**

மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கருர்ரோடு காவல் நிலையம் ரவுண்டானா தென்புற சாக்கடை கால்வாயில் உள்ள சாக்கடை மண் தூர் எடுத்து சுத்தம் செய்ய தனியார் கிட்டாச்சி இயந்திரத்தை பயன்படுத்தி, டிப்பர் லாரி மூலம் அப்புறப்படுத்த விலைப்புள்ளி கோரிட ஏற்கனவே நகர் மன்ற தீர்மானம் எண்.**978**, நாள்.**31.08.2018** இன் படி மன்றம் அனுமதி வழங்கப்பட்டதின் படி கீழ்கண்ட நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
மதீப்பீட்டு தொகை. **2.00** இலட்சம்.

| | |
|---|---|
| 1)THIRUMANICONSTRUCTIONS, KANGAYAM | – மதிப்பீட்டைவிட **5.45** % குறைவு |
| **2)** சுப்பையா கான்ட்ராக்டர் | – மதிப்பீட்டைவிட **0.65** % அதிகம் |

மேற்காணும் இரு நிறுவனங்களிலிருந்து, வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள வ.எண்.**1**, THIRUMANICONSTRUCTIONS, KANGAYAM

எனும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும் தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1083 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:24</u>**

**கோப்பு எண் : 583/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பொதுக் கழிப்பிடங்களில் தண்ணீர் குழாய் கதவுகள், டைல்ஸ் போன்றவைகள் பழுதடைந்துள்ளது. இதனால், பொதுமக்கள் கழிப்பிடங்களை சரிவர உபயோகிக்க இயலாத நிலையில் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த கழிப்பிடங்களை சரிசெய்து பொருத்த வேண்டியுள்ளது. . இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1084 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:25</u>**

**கோப்பு எண் : 565/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அமராவதி நகரிலிருந்து அகிலாண்டபுரம் வழியாக கரூர் சாலை செல்லும் சாலையின் ஓரமாக அமைக்கப்பட்டுள்ள பொதுக்கிணற்றில் ஓரமாக பாதுகாப்பு கருதி தடுப்புச் சுவர் அமைத்து தர கோரப்பட்டுள்ளது. இந்த சாலை போக்குவரத்து மிக்க முக்கியமான சாலையாகும். எனவே, கிணற்றின் ஓரமாக தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.60 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1085 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:26</u>**

**கோப்பு எண் : 539/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அண்ணா நகர் குளம் அருகில் வடிகால் இணையும் இடத்தில் தடுப்பு சுவர் அமைக்க வேண்டியுள்ளது. இதனால் தண்ணீர் வெளியேறி சாலைக்கு வராமல் வடிகால் வழியாக வெளியேறிவிடும். இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1086 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:27**

**கோப்பு எண் : 564/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட எல்.ஜி.ஜி.எஸ் காலணி பகுதியில் ஜே.கே மருத்துவமனை அருகில் உள்ள தார்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால், பொதுமக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமப்படுவதால் இந்த சாலையை சீரமைத்து தருமாறு கோரியுள்ளனர். பொதுமக்கள் நலன் கருதி இந்த சாலையை சீரமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1087 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:28**

**கோப்பு எண் : 2011/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோடு ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில் முதல் எரிவாயு தகனமேடை வரை வடிகால் வசதி செய்து தருமாறு சென்னிமலை ரோடு பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். இப்பகுதியில் வடிகால் அமைப்பு நல்ல நிலையில் இல்லாததால் இப்பகுதியில் கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால், பொதுமக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படும் நிலையுள்ளது. எனவே, இப்பகுதியில் வடிகால் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1088 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:29**

**கோப்பு எண் : 678 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சந்தை வளாகம் பகுதியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் Micro compost centre (2 tonne capacity) அமைக்கப்பட்டு வருகிறது. இதில் கூடுதலாக கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

1. தரைத்தளம் அமைத்தல்
2. கூடுதல் ஷெட் அமைத்தல்
3. கிரில் வைத்தல்
4. பிளாட்பார்ம், ரேம்ப் அமைத்தல்
5. கழிப்பிடம் டைல்ஸ், டோர் அமைத்தல்
6. திட்ட வரைபடம் அமைத்தல்
7. கழிவு நீர் குழாய், கழிவு நீர் தொட்டி அமைத்தல்
8. ஒயரிங் பணிகள் மேற்கொள்ளுதல்

மேற்படி பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1089 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

மன்றப்பொருள்:30

**கோப்பு எண் : 666 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்காணும் இடங்களில் தெருமின் விளக்குகள் அமைத்து தரக் கோரி பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளது. மேலும், மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தின் பொழுதும் இப்பகுதிகளில் தெருமின்விளக்குகள் அமைத்துதர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி | மின் விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சக்தி நகர் | 5 |
| 2 | அய்யாச்சாமி காலனி ராஜா ஸ்கூல் பிரிவு | 1 |
| 3 | அய்யாச்சாமி காலனி ராஜா ஸ்கூல் பிரிவு மேற்கு | 1 |
| 4 | அய்யாச்சாமி காலனி ASP வீடு அருகில் | 1 |
| 5 | பழையகோட்டை ரோடு முதல் மூர்த்திரெட்டிபாளையம் ரோடு | 5 |
| 6 | மூர்த்திரெட்டிபாளைம் கிழக்கு | 3 |
| 7 | 16 வது வார்டு பாலியக்காடு | 1 |
| 8 | அறிவுத் திருக்கோவில் அருகில் | 1 |
| 9 | பங்களாப்புதூர் ரோடு தெற்கு | 1 |
| 10 | திருப்பூர் ரோடு நெல்லை ஸ்டோர் சந்து | 1 |
| 11 | புலிமா நகர் | 1 |
| 12 | வாய்க்கால் மேடு பெரியசாமி வீடு அருகில் | 1 |
| 13 | கோவை ரோடு வாய்க்கால் மேடு கிழபுறம் | 1 |
| 14 | கோவை ரோடு மளிகை அப்புக்குட்டி வீடு தென்புறம் | 1 |
| 15 | உடையார் காலணி ஷங்கர் வீடு கிழபுறம் | 1 |
| 16 | உடையார் காலணி மேற்கு துரைசாமி வீடு அருகில் | 1 |
| 17 | உடையார் காலணி மளிகை கடை மணி வீடு அருகில் | 1 |
| 18 | உடையார் காலணி பங்கஜம்மா வீடு அருகில் | 1 |
| 19 | உடையார் காலணி வானவில் பைனான்ஸ்காரர் வீடு அருகில் | 1 |
| 20 | உடையார் காலணி டெலிபோன் குவார்ட்டர்ஸ் அருகில் | 1 |
| 21 | உடையார் காலணி நாச்சியப்ப கவுண்டர் வீடு அருகில் | 1 |
| 22 | உடையார் காலணி கதிர்வேல் வீடு அருகில் | 1 |
| 23 | உடையார் காலணி வசந்தம் நகர் | 1 |
| 24 | உடையார் காலணி ஆர்.கே.ஜி. காம்ப்ளக்ஸ் அருகில் | 1 |
| 25 | உடையார் காலணி டெலிபோன் நாகராஜ் வீடு அருகில் | 1 |
| 26 | உடையார் காலணி யோகராஜ் வீடு அருகில் | 1 |
| 27 | உடையார் காலணி வாய்க்கால்மேடு | 5 |
| 28 | வெள்ளியங்காடு பாலம் அருகில் | 1 |
| 29 | அகஸ்திலிங்கம் பாளையம் கோழிப்பண்ணை அருகில் | 1 |
| 30 | வார்டு எண்.14 சேல்ஸ் டேக்ஸ் ராஜேந்திரன் வீடு அருகில் | 1 |

| வ.எண் | பகுதி | மின் விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 31 | வார்டு எண்.14 திருவேங்கடசாமி வீடு அருகில் | 1 |
| 32 | வாய்க்கால்மேடு நாச்சிமுத்து கல்யாணமண்டபம் | 1 |
| 33 | வாய்க்கால்மேடு சுப்பிரமணி வீடு அருகில் | 1 |
| 34 | திருப்பூர் ரோடு ஆக்ஸிஸ் வீடு அருகில் | 1 |
| 35 | ஏ.சி நகர் பாலம் அருகில் முதல் கம்பம் | 1 |
| 36 | திரு.வி.க நகர் அறிவுத் திருக்கோவில் | 1 |
| 37 | திரு.வி.க நகர் கடைசி பகுதி | 1 |

| | | |
|---|---|---|
| 38 | ஏ.சி லாட்ஜ் முதல் கம்பம் அருகில் | 1 |
| 39 | பேபி ஆயில் மில் சின்னாய்புதூர் சந்து | 1 |
| 40 | வாய்க்கால் மேடு தலைவர் வீடு லைன் | 1 |
| 41 | பட்டேல் வீதி | 1 |
| 42 | அய்யாச்சாமி காலணி 4வது வீதி | 1 |
| 43 | பங்களாப்புதூர் ரோடு | 1 |
| 44 | அண்ணாமலை நகர் | 1 |
| 45 | புது வசந்தம் நகர் | 1 |
| | **மொத்தம்** | 59 |

மேற்படி பகுதிகளில் தெருவிளக்குகள் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்படி இடங்களில் தெருமின்விளக்குகள் அமைக்கலாம். இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1090 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:31**

**கோப்பு எண் : 700/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காவேரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்களின் மூலம் ஏழு மேல்நிலைத் தொட்டிகள் மூலமாக ஏழு மண்டலங்களாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒரே நேரத்தில் மூன்று பிரிவுகளாக குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்த அடிப்படையில் " குழாய் திறப்பாளர் " பணிக்கு தகுதி வாய்ந்த 4 நபர்கள் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1091 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:32**

**கோப்பு எண் : 1346 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட MPN நகர் மற்றும் பழையகோட்டை ரோடு பகுதிகளில் தார்சாலைகள் பழுதடைந்துள்ளது. இதனால் போக்குவரத்திற்கு பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இந்த சாலைகளை பொதுமக்கள் நலன் கருதி சீரமைப்பு செய்து பராமரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1092 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:33**

**கோப்பு எண் : 665/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை பிரித்து இடத்தை சுத்தப்படுத்தும் Bio mining பணி நடைபெறுவதால் வேலை உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இப்பணிக்கு இயந்திரங்கள் இயக்குவதற்கு 120எச்.பி திறன்கொண்ட மும்முனை மின் இணைப்பு பெற வேண்டியுள்ளது. பணியின் அவசியம் கருதி உடனடியாக இப்பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது . இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2.20 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1093 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:34**

**கோப்பு எண் : 501/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதற்காக 7 மேல்நிலைத் தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. குடிநீர் விநியோகத்தை முறைப்படுத்தவும் குடிநீர் விநியோகத்தை அளவிடவும் இந்த மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து வெளியேறும் குடிநீரை கணக்கிடவும் வாட்டர் மீட்டர் பொருத்த வேண்டியுள்ளது. இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1094 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:35**

**கோப்பு எண் : 1199/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், பொது சுகாதாரம் ஆகியவை சம்பந்தமான பணிகளை 24 மணி நேரமும் கண்காணித்து பொதுமக்களின் குறைகளை / தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இது தவிர அரசின் திட்டப் பணிகள் / வளர்ச்சிப் பணிகள் பொதுமக்களை உரிய காலத்தில் சென்றடைய மிகவும் விழிப்புடன் பணிகளை கண்காணிக்க வேண்டியுள்ளது. இதில் முதன்மையானவர்கள் நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆவர். எனவே, இவர்கள் நகராட்சி பகுதிக்குள் குடியிருந்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கு ஏதுவாக ஆணையாளர் மற்றும் பொறியாளருக்கு இந்நகராட்சிக்கு சொந்தமான தண்ணீர்பந்தல் நீருந்து நிலைய வளாகத்தில் குடியிருப்புகள் அமைக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.49.50 இலட்சத்திற்கு (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1095 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:36</u>**

**கோப்பு எண் : 611/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு உடையார் காலணியில் வடிகால் வசதி இல்லாததால் கழிவுநீர் வெளியேற இயலாமல் சாலையில் செல்கிறது. இதனால் சுகாதார சீர் கேடு ஏற்படும் நிலை உள்ளது. எனவே, இப்பகுதியில் வடிகால் வசதிகள் செய்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரி வருகின்றனர். இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1096 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:37</u>**

**கோப்பு எண் : 1296 /2018 /இ1**

காங்கயம் நகராட்சி பேருந்து நிலையத்தில் மின் விளக்குகள் பழுதடைந்து ஒளிர்வதில்லை. மேலும், மின் ஒயர்கள் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது. இதனால் பேருந்து நிலையம் இரவு நேரங்களில் போதுமான வெளிச்சம் இல்லாத நிலையில் உள்ளது. பொதுமக்கள் அதிகமான நடமாட்டம் உள்ள பேருந்து நிலையத்தில் நல்ல வெளிச்சம் இரவு நேரங்களில் தேவைப்படுகிறது. எனவே, பழுதடைந்துள்ள மின் ஒயர்கள் மற்றும் மின் விளக்குகளை சீரமைத்து அமைக்கப்பட வேண்டும். இந்த பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1097 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:38</u>**

**கோப்பு எண் : 883/2018 /இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1 முதல் 9 வரை சிறுமின்விசைப்பம்பு திட்டம் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்காக 27.12.2018-ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட - 0.10 %குறைவு |
| 2.கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 0.74 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.10 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்அவர்களின்ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1098 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:39**

**கோப்பு எண் : 883 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 9 வரையிலான பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் சிறுமின் விசைப்பம்பு திட்டங்கள் காவிரி மற்றும் அமராவதி குடிநீர் வினியோக மற்றும் மெயின் குழாய்களில் ஏற்படும் பழுதுளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து கொடுக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்ட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1099 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:40**

**கோப்பு எண் : 883 /2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10 முதல் 18 வரையிலான பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் சிறுமின் விசைப்பம்பு திட்டங்கள் காவிரி மற்றும் அமராவதி குடிநீர் வினியோக மற்றும் மெயின் குழாய்களில் ஏற்படும் பழுதுளை குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் உடனுக்குடன் பழுதுகள் சரி செய்து கொடுக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்ட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1100 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:41**

**கோப்பு எண் : 883/2018 /இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.10 முதல் 18 வரை சிறுமின்விசைப்பம்பு திட்டம் மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு செய்யும் பணிக்காக 27.12.2018-ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட - 0.10 %குறைவு |
| 2.கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 0.50 % அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.10 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1101 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:42**

**கோப்பு எண் : 715/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய பயன்படும் அமராவதி மற்றும் காவேரி குடிநீர் திட்டங்களின் குடிநீர் விநியோகத்தில் குளோரினேசன் செய்ய பயன்படும் ஹைப்போ குளோரைடு திரவம் விநியோகம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஒப்பந்த அளவு தற்சமயம் முடிவடையும் நிலையில் உள்ளது. எனவே, ஹைப்போகுளோரைடு விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம்மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1102 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:43**

**கோப்புஎண் : 1116/2018 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான அமராவதி ஆற்றுக் குடிநீர் திட்டத்தின் தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீரை சுத்தப்படுத்தும் பணிக்கு பயன்படும் ஆலம் கட்டிகள் இருப்பு மிகவும் குறைவாக உள்ளது. எனவே, குடிநீர் அவசியம் கருதி ஆலம் விநியோகம் செய்யும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1103 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:44</u>**

**கோப்பு எண் : 515 /2017/எச்1**

காங்கயம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் தற்போது பிறப்பு, இறப்பு கணினிமயமாக்கப்பட்டதால் அதற்கான விவரங்கள் இணைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டம், தூய்மை இந்தியா திட்டம், பசுமை உரம் தயாரிக்கும் மையத்திற்கு தினசரி சென்று வரும் வாகனங்களின் விவரங்களை பதிவிடவும், சர்வீஸ் ஏரியா தொடர்பான விவரங்கள் இணைதளத்தில் பதிவேற்றம் செய்வது மற்றும் பிரதி எடுக்க வேண்டியுள்ளதால் பொதுசுகாதார பிரிவிற்கு கணினிகள் மற்றும் இருபக்கம் பிரிதி எடுக்கும் பிரிண்டர்கள் வாங்கிட ஒப்பந்தப்புள்ளி கோரிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம். இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1104 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:45</u>**

**கோப்புஎண்.699 /2018 /எச்1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் ஜெ.சி.பி வண்டி எண். TN 42 V 6706 –இன்படி டயர் ஒரு செட் டயர் எண்.15–9–2812 மேற்படி பழைய டயர் பழுதடைந்து விட்டதால் வண்டியினை இயக்க சிரமமான நிலை உள்ளதால் 2 டயர் டியூப்கள் மற்றும் சிறு பழுதுகளால் ஏற்பட்டுள்ள உதரி பாகங்கள் மாற்றிடவும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1105 . நாள்.31.12.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:46</u>**

**கோப்புஎண்.1768 /2017/எச்1**

உறுப்பினர் மற்றும் செயலர், எல்லை வரையறை ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி.1, நாள்.24.11.2017 ஆம் தேதிய கடிதம் மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.233, நாள்.11.07.2017 இன்படியும் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளை 2011 மக்கள் தொகை அடிப்படையில் எல்லை வரையறை செய்ய தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படியும் எல்லைகளை மறு நிர்ணயம் செய்து கருத்துரு அனுப்பபட்டதற்கு நகல், வண்ண பிரதி, வரைபடம் தயார் செய்தல் மற்றும் கையேடு தயார் செய்தலுக்கு ஆன செலவினம் மற்றும் இனி வரும் காலங்களில் வார்டு வரையறை செய்ய ஆகும் செலவினங்களுக்கும் பட்டியல் படி தொகை வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் 1.00 இலட்சம் ரூபாய்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1106 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:47**

**கோப்பு எண் 2219 /2015 /எச்1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில்வடகிழக்கு பருவமழையினால் டெங்கு காய்ச்சல் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதிகளில் உள்ள 12009 கட்டிடங்களில் நல்ல தண்ணீர் சேமித்து வைக்கும் பாத்திரங்கள், கீழ்நிலைத் தொட்டிகள், சின்டெக்ஸ் டேங்க், சிமெண்ட் தொட்டிகள், கண்டெய்னர்களில் உற்பத்தியாகும் கொசுப்புழுக்களை அபேட் மருந்து மற்றும் பிளிச்சிங் பவுடர் தெளித்து அழிக்கவும், வீட்டினை சுற்றியுள்ள பகுதிகளில் தேவையற்ற டயர்கள், பீங்கான்கள், பாட்டில்கள், தேங்காய் சிரட்டைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தவும் கொசுப்புழு ஒழிப்பு தற்காலிக களப்பணியாளர்கள் 300 வீடுகளுக்கு 1 களப்பணியாளர்கள் வீதம் 40 நபர்களை பொது சுகாதரா அவசர அவசியம் கருதி நியமித்தமைக்கும் டெங்கு காய்ச்சல் மற்றும் அனைத்து காய்ச்சல் அறிகுறிகளையும் கட்டுப்படுத்திட பொதுமக்களுக்கு தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்திட நகரின் முக்கிய இடங்களான பேருந்துநிலையங்கள், அரசு மருத்துவமனை, நகராட்சி அலுவலகம், மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் பிளக்ஸ் பேனர்கள் வைத்திடவும், துண்டு பிரசுரங்கள் வீடு வீடாக விநியோகிக்கவும், ஆட்டோ விளம்பரம் செய்திடவும், மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உயர் அலுவலர்களுக்கு கலர் போட்டோ பிரண்ட்டுகள் மூலம் அறிக்கை அனுப்புதல் ஆகிய மேற்கண்ட பொருள் சம்பந்தமான செலவினங்கள் மேற்கொள்ளவும் மற்றும் 40 களப்பணியாளர்களுக்கான ஊதியம் வழங்கவும் , மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக் குறிப்பு**

1. மாவட்ட ஆட்சியர் அவர்களின் வாரந்திர டெங்கு காய்ச்சல் தடுப்பு குறித்த ஆய்வுக்கூட்ட நடவடிக்கையின் படியும், இணைஇயக்குநர் பொது சுகாதாரம் திருப்பூர் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் 300 குடியிருப்புகளுக்கு ஒரு தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு களப்பணியாளர்களை நியமனம் செய்ய மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. மாவட்ட ஆட்சியர், திருப்பூர் அவர்களின் தினக்கூலி அடிப்படைத் தொகைக்கு மிகாமல் மேற்கண்ட தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1107 . நாள்.31.12.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.